முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 794**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

01.12.2021, புதன்கிழமை

1. ஓங்காரசக்தியே அரங்கா வாழ்க
ஓங்காரசூட்சுமமே தேசிகா வாழ்க
ஓங்காரக்குடில் படைத்த குருராஜனே வாழ்க
ஓங்காரன் யானும் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
2. ஆசி தனை பிலவ தேள் திங்களில்
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 15ம் நாள், 01.12.2021 புதன்கிழமை)
அருளுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே
வாசி வென்ற சக்தி பெருக்கம் தன்னை
வல்லமைபட அரங்கனுக்கு வரமாகத்தந்து
3. தந்துமே அரங்கனுள் யானிருக்க
தவசி சொல் செயல்கள் அனைத்தும்
மண்ணுலகில் மாற்றம் செய்தருளும்
மாதவசி ஆசி பெற்ற தொண்டர் படைகள் மூலம்
4. மூலமதில் இந்த கலியுகம் மாற்றம் பெறும்
முழுமையான ஞான யுகமாற்றம் காணும்
காலனை வென்று உலகோர்க்கு பாதுகாப்பு
கந்தவேலன் என் சக்தியாக அருளுகின்ற அரங்கன்
5. அரங்கனின் ஆசியும் அறமும்
அருட்தயவும் உலகோரை மீட்டருளும்
வாசியோக வல்லமையும் அரங்கன் வழி வர
வடிவேலன் என்னருளால் தானாக சித்திக்கும்
6. சித்திக்க அரங்கன் கரம்பட தீட்சை
சிந்தை மகிழ்ந்து உலகோர் வந்து ஏற்றுவர
உத்தமமாய் உலகோர் ஞானவான்களாகி
உலகமாற்றம் செய்யும் வண்ணம் சக்தி கூடி
7. சக்தி கூடி கலியினில் ஞானிகளாக
சாற்றிடுவேன் தர்மவான்களாகப் பெருகி
இத்தரையில் அற்புதம் நிகழ்த்துவர்
இனிதே அரங்கன் வழி ஆறுமுகன் யான் உலகமாற்றம் செய்தருள்வேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–